Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 01 (17 - 07 - 1991) புதன்கிழமை ஓசை: 149

## வாழ்க்கைத்திறன் நிதி; பாடசாலைகள் அசட்டை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைத்திறன் கல்விக்கான நிதியைப் பெற்றுக் கொள்வதில் ஐம்பது வீதமான பாடசாலைகள் அசட்டை செய்வதாக கல்விஅதிகாரி ச. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். நடைமுறை ஆண்டிற்குரிய வாழ்க்கைத்திறன் கல்விக்கான மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான நிதியை 75 பாடசாலைகள் இதுவரை (4ஆம் பக்கம் பார்க்க)

கட்டைக்காடு - வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய

# இராணுவம் முன்னேறவிடாது புலிகள் தொடர்ந்தும் தாக்கு

## பல படை பலி; புலிகள் வீரமரணம்

(கட்டைக்காடு)

கட்டைக்காடு–வெற்றிலைக்கேணிப் பகுதியில் தரையிறங்கிய சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மூன்றாவது நாளாக நேற்றும் கடும் மோதல் இடம் பெற்றது. நேற்றைய மோதலிலும் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இராணுவத்தின் முன்னேறும் முயற்சி முறியடிக்கப்பட்டது.

புலிகள் தரப்பில் முதல் நாள் மோதலில் பத்துப் போராளிகளும், அடுத்த இரண்டு நாட்களிலும் பத்துப் போராளிகளுமாக இருபது போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர்.

கட்டைக்காடு-வெற்றிலைக் கேணிப் பகுதியில் கடந்த ஞா பிற்றுக்கிழமை தரையிறக்கப் பட்ட சிறிலங்கா இராணுவத்தி னரின் இரண்டாவது முயற்சி இதுவரையும் இம்முயற்சியில் விடு தலைப்புலிகளின் கடும் எதிர்ப் பினால் ஒரு அடிதானும் சிறி லங்கா இராணுவத்தால் முன் னேற முடியவில்லை எனத் தெரியவருகின்றது.

இவ் இராணுவ நடவடிக் கைக்கு 'ஒப்பரேசன் பலவே கய' என சிறிலங்காப் பாது (4ஆம் பக்கம் பார்க்க)

### வீரவணக்கம் யாசீர்

கட்டைக்காட்டில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் யாசீர் (சாவகச்சேரி) வீர மரணமடைந்தார். அவர் முன்னரே காவலரணொன்றில் இராணுவ தாக்குதலின்போது காலமடைந்து ஒரு கையை இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கட்டைக்காட்டில் மேலும் படை இறக்கம்

கட்டைக் காட்டுப்பகுதியில் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்திற்கு உதவியாக நேற்றிரவும் பெருமளவு இராணுவத்தினரும் வாகனங்களும் தரையிறக்கப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மூவாயிரம் இராணுவத்தினர் தரையிறங்கியுள்ளனர் என முன்னரே சிறிலங்கா அறிவித்திருந்தமை தெரிந்ததே.

## ஆனையிறவு மோதலில் இதுவரை 62 பெண் போராளிகள் வீரமரணம்

(ஆனையிறவு) ★ றூபிசா (டயனி, அலோ தபேசா (மஞ்சுளா,

# ஆனையிறவு மோதலில் இதுவரை 62 பெண் போராளிகள் வீரமரணம்

(ஆனையிறவு)

ஆனையிறவு முகாம் தாக்குதலில் நேற்று முன்தினம் வரை 62 பெண் போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களில் 48 போராளிகளின் பெயர் விபரம் வருமாறு.

★ நிசாமா (ஈஸ்வரி, தங்கராசா ஆலங்கேணி, கிண்ணியா)
★ சகாரா (மகேஸ்வரி, பொன்னுச்சாமி கிராமம், மட்டுநகர்)
★ ஜமுனா (சிதாலட்சுமி, இயாகராசா சாளம்பி குளம், வவுனியா)
★ லோசா (கோமதி, சக்திவேல் இதயநகர், கிளிநொச்சி)
★ பகிர்தா (சிவநந்தினி, சின்னத்தம்பி அன்னமார், கோயிலடி ஏழாலை வடக்கு)
★ றூபிகா (டயனி, அலோசியஸ் செபஸ்தியார் கோவில் மன்னார்)
★ 2 ஆம் லெப்டினன்ட் அமராவதி (நகேஸ்வரி, தனபாலசிங்கம் கருமாதா கோவில், நாவற்குளி)
★ 2 ஆம் லெப்டினன்ட் தபேசா (மஞ்சுளா, சுப்பையா கொண்டவடி வேலன் நல்லூர்)
★ லெப்டினன்ட் வாகினி (தேவராணி, கந்தசாமி கலவாக்கேணி மட்டுநகர், வாழைச்சேனை)

(3 ஆம் பக்கம் பார்க்க)

## படை இறக்கம்

கட்டைக் காட்டுப்பகுதியில் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்திற்கு உதவியாக நேற்றிரவும் பெருமளவு இராணுவத்தினரும் வாகனங்களும் தரையிறக்கப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மூவாயிரம் இராணுவத்தினர் தரையிறங்கியுள்ளனர் என முன்னரே சிறிலங்கா அறிவித்திருந்தமை தெரிந்ததே.

## இயக்கச்சிமீது நேற்று பலத்த குண்டு வீச்சு

(இயக்கச்சி)

ஆனையிறவுக்குச் சமீபமாக கண்டி வீதியில் இருக்கும் இயக்கச்சிக்கிராமம் சிறிலங்கா விமானப்படையின் அவ்ரோ - 12 ரக குண்டு வீச்சு விமானத்தின் பலத்த குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளது. உலங்கு வானூர்திகள் குண்டு வீச்சு விமானங்கள் என்பனவும் பிற்பகல் 5'30 மணிவரை இப்பகுதியில் தாக்குதல் நடத்தியுள்ளன. நேற்றுக்காலை முதல் பல தடவைகள் இங்கு பீப்பாக்குண்டுகள் வீசப்பட்டன. இக்குண்டுவீச்சினால் இயக்கச்சி சந்திப்பகுதியிலுள்ள சில வீடுகள் தென்னந்தோட்டங்கள் என்பன பலத்தசேதத்திற்கு உள்ளாகியுள்ளன.

## புலிகள் அவசர வேண்டுகோள்

ஆனையிறவுப் போர் விரிவடைந்து செல்கின்றது கடற்கரைகளிலும் பொட்டல் வெளிகளிலும் சண்டை நடக்கின்றது எமது போராளிகள் இலகுவாகச் சண்டையைத் தொடர்வதற்கு ஏற்ற விதத்தில் காப்பரண்கள் அங்கு இல்லை. எனவே செயற்கையான காப்பரண்களைச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். மண் மூடைகள் பெருமளவில் தேவைப்படுகின்றது. அதேசமயம் விரைவாகத் தேவைப்படுகின்றது மண்மூடைதயாரிப்பதற்குரிய சாக்கு, உரப்பை, சாக்கூசி, சணல், மண்வெட்டி, சவள், பிக்கான் என்பவற்றை எமது அன்பிற்குரிய மக்களிடமிருந்து அவசரமாக எதிர்பார்க்கின்றோம் என விடுதலைப் புலிகள் அவசர வேண்டுகோளை விடுத்துள்ளனர். மேலும் தரையிறக்கப்பட்ட இராணுவத்திற்கும், ஆனையிறவு முகாமுக்கும் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் கடும் மோதல்; ஆறு இராணுவத்தினர் பலி

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின்முகாமை முற்றுகையிட முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இராணுவத்தரப்பில் ஆறுபேர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் பன்னிரண்டு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். இராணுவத்தினரிடமி (4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றில் நேற்றும் 4 இராணுவம் பலி

(கொழும்பு)

மணலாற்றில் அடர்ந்த காட்டுப் பகுதியில் நேற்றும் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றதாக சிறிலங்கா (4 ஆம் பக்கம் பார்க்க)

## 12 புலிகள் வீரமரணம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் இராணுவத்துடன் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மோதலில் பன்னிரண்டு விடுதலைப்புலிகள் வீரமரணம் அடைந்னனர். கப்டன் மனோ (கோணலிங்கம் சிறீதரன் குச்சவெளி), கப்டன் பசீலன் சந்திரசேகரன் விமலநாதன் கொக்குத்தொடுவாய்), லெப். குஞ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மாரீசங்கூடல் கடலில் ஐந்து மீனவர்கள் கைது

(மாரீசங்கூடல்)

மாரீசங்கூடல் கப்பலடிக் கடற்கரைப் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த ஐவரை விசைப் படகில் வந்த சிறிலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றதாக அறிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் நேற்று (16-7-91) காலை 8 மணியளவில் நடைபெற்றது.

மாரீசங் கூடலைச் சேர்ந்த பாபு (வயது 28) ரஞ்சன் (வயது 27) சினிப்பந்தலடியைச் சேர்ந்த மெண்டிஸ் (வயது 26) ராஜன் (வயது 25) ஈசன்கேசன் துறையில் இருந்து இடம் (4 ஆம் பக்கம் பார்க்க)

## 1990இல் சிறிலங்காவின் கடன் 5·1 பில். அமெரிக்க டாலர்

(பாங்கொக்)

சிறிலங்காவின் 1990க்கான வெளிநாட்டுக் கடன் 5·1 பில்லியன் அமெரிக்க டாலர் என்று உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா உட்பட ஏனைய வளர்முக நாடுகள் தேசிய உற்பத்தியில் பெரும் பகுதியை வெளிநாட்டுக் கடனை அடைப்பதற்காகப் பயன்படுத்துகின்றன என்று தாய்லாந்தில் கூடிய மூன்றாம் உலக நாடுகள் கடன் ஆலோசனை அமைப்பு என்ற அரச சார்பற்ற நிறுவனம் தெரிவித்துள்ளது. மற் (4 ஆம் பக்கம் பார்க்க)

# காணாமல் போன இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்

(வவுனியா)

வவுனியாவில் கடந்தவாரம் காணாமல் போயிருந்த வாலிபர் ஒருவர் சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

இராமையா சந்திரன் (32) என்ற வாலிபர் மாறம்பைக் குளம் பகுதியைச் சேர்ந்தவர் இவர் கடந்த வாரம் காணாமல் போயிருந்தார். காணாமல் போன இவரைத் தேடி உறவினர்கள் தேடுதல் நடத்தியதில் இவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

வவுனியா நீர்ப்பாய்ச்சல் குளப்பகுதியில் இவரது சடலம் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டினால் இவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

(தி)

## பஞ்சாப் தீர்விற்கு

# அரசியல் கட்சிகளுடன் மத்திய அரசு ஆலோசனை

(டில்லி)

பஞ்சாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசியல் கட்சிகளுடனும், ஏனைய குழுக்களுடனும் மத்திய அரசாங்கம் ஆலோசனை நடத்தும் என இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்துள்ளார்.

பஞ்சாபிலிருந்து வந்த இளைஞர் காங்கிரஸ் தொண்டர்களிடம் இதனைத் தெரிவித்த பி. வி. நரசிம்மராவ் அடுத்த சில நாட்களில் பஞ்சாப் பிரச்சினையை தீர்க்க முயற்சி செய்யப்படும் என்றும் தெரிவித்தார். பஞ்சாப்பில் தேர்தல் நடத்தக் கூடிய சாத்தியம் இல்லை என்றும் தேர்தல் நடைபெற்றால் வாக்காளர்களும் மக்களும் வீணாக உயிர் இழக்க வேண்டி இருக்கும் என்றும் பிரச்சினைக்கு தீர்வு கண்டபின்னர் தேர்தலை நடத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

## இன்ரறக்ட் கூட்டம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்ரறக்ட் கழக உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று காலை 9 மணிக்கு பாடசாலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிவுபசார வைபவம்

(கொழும்புத்துறை)

யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலையில் பத்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றி சுய விருப்பின் பேரில் ஓய்வு பெற்றுச் சென்ற ஐந்து ஆசிரியர்களுக்கு பாடசாலை நலன்புரிச் சங்கத்தின் சார்பாக 09-07-91 பாடசாலை மண்டபத்தில் பாராட்டு வைபவம் ஒன்று நடைபெற்றது. இவர்களது சேவை நலனைப் பாராட்டி அதிபர், திரு. தம்பிராசா, திரு. த. ஸ், பாலசுந்தரம், திருமதி. ஸ்ரீ. ஆனந்தகுமாரசாமி, திருமதி. ப. நல்லதம்பி ஆசிரியர்கள் சிறப்புச் சொற்பொழிவும், ஆசியும் வழங்கினார்கள்.

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரியில் கல்விபயிலும் ஆண்டு 11 12,13 மாணவர்களை இன்று காலை 9 மணிக்குப் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதன் உப அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஒத்துழைப்பு தளமாக அமைய வேண்டும்

(கொழும்பு)

இந்து சமுத்திர விவகார ஒத்துழைப்பு நிர்வாகக் குழு சக்தியுள்ளதாகவும், சர்வதேச ஒத்துழைப்பிற்கு தளம் அமைப்பதாகவும் மாற்றம் பெற வேண்டும். இதன் மூலம் இப் பிராந்திய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியும் என்று சிறிலங்கா வெளியுறவுத்துறை அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த நிர்வாகக் குழுவின் ஏழாவது கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய போது இதனைத் தெரிவித்தார்.

## சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மருதனாமடம் கல்விக் கோட்டத்தின் கீழ் பாடசாலைகளில் மனைப் பொருளியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சே. கா. ப. கருத்தரங்கு வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை 4.30 மணிவரை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மனைப்பொருளியல் கல்வி அதிகாரி அறிவித்துள்ளார். (மு)

## அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப்பிரிவின் கல்வி ஆண்டு 91ற்கு யாழ் தேவரையாளி இந்துக் கல்லூரியில் தோற்றவுள்ள மாணவர்கள் நாளை (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு பாடசாலைக்குச் சமுகமளித்து பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு இதன் பொறுப்பாசிரியர் கேட்டுள்ளார். (ச)


## வரிவிளம்பரம்

டில்கா வாச் வேக்ஸ்

சாவித்த சகல மணிக்கூடுகளின் உதிரிப்பாகங்கள் வாங்கப்படும் விற்கப்படும் (சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்) டில்கா வாச் வேக்ஸ் 404/1, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (R-1556)

ஜீவிகா

தொழில் நுட்பக் கூடம்

ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, நிலைவிடி மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்தபவர்களும், விற்பனையாளர்களும், வீடியோ டெக் படப்பிடிப்பாளர்களும் புதிய பழைய பாடல்களும் (பாட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும். ஒட்டுமடம் சந்தி, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (B-2764)



### புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் 1990 / 91

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தைத் தொடர்ந்து, தற்பொழுதுள்ள சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு தபால் மூலமும் புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம். பதிவு செய்யும் இறுதித் திகதி 01-08-91 ஆகும். பதிவு செய்யும் பத்திரம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிலும் பெற்றுக் கொள்ளலாம்.

சுயமுகவரியிட்ட முத்திரையொட்டிய கடிதவுறையும் அனுப்பப்பட வேண்டும்.

: பதிவாளர்.

(B-2819)



## கண்ணீர் அஞ்சலி

ஆனையிறவு இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த

வீரவேங்கை ஜஸ்ரின்

(கிருஷ்ணபிள்ளை சுதாகர்)

அவர்களுக்கும் சக போராளிகளுக்கும்

எமது கண்ணீர் அஞ்சலிகள்!

கொற்றாவத்தை கலைவாணி ச. ச. நிலையத்தினர்

(R/ 1551)



# 5-ம் ஆண்டு நிறைவு நாள்



| தாயின் மடியில் | தாயக மீட்பில் |
|---|---|
| 03 - 09 - 1962 | 17 - 07 - 1986 |

## சூ. ஆசிர்வாதம் (ஜெகா)

## (லெப். ராஜ்குமார்)

வேங்கையாகி விடிவுகள் தேடி
விழுந்த வீரனே
தமிழ் விடுதலை மாவிலும்
விளக்காகி ஒளிரும் சுடர்வீரனே!

மண்கும்பிருப்பு, முள்ளைத்தீவு. (R/1526)

பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்.



# நினைவு கூருகின்றோம்...

## 1991-07-17

1985 ஆம் ஆண்டு இதேதினத்தில் கொத்தியாவளையில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

லெப். பயஸ் (அந்தோனிப்பிள்ளை ஜெஸ்லி - மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு முள்ளைத்தீவில் தண்டுவான் என்ற இடத்தில் பேரூந்து மீது சிறிலங்காப் படையினரின் உலங்கு வானூர்தி தாக்கியதில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்.

பூநகரி பள்ளிக்குடா பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழ் இளைஞர்கள்.

1987 ஆம் ஆண்டு மருதங்கேணியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

வரதன் (சின்னத்தம்பி சச்சிதானந்தசிவம் - மாமுனை செம்பியன்பற்று)

தெல்லிப்பளையில் தற்செயலாக நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டு விபத்தினால் எமைப்பிரிந்த

பதுமன் (குயின்டன் குருஸ்-பெரியபண்டி விரிச்சான்)

1989 ஆம் ஆண்டு முகமாலையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

நிரு (சிவப்பிரகாசம் வைகுந்தவாசன் - புலோப்பளை, பளை)

விசுவமடுவில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

உதயன் (உதயகுமார் - குப்பிளான்)

1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

மிதுலன் (மாணிக்கம் சிறீதரன் - அளம்பில்)

கபில் (சுப்பிரமணியம் முருகேந்திரன் - உடையார் கட்டு)

தம்பலகாமத்தில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

செட்டிகுளத்தில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு, முகாமில் சுட்டுக் கொல்லப்பட்டு, கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்.

சிறிலங்காப் படையினரின் நடவடிக்கைகளின் பின், மட்டக்களப்பு தொலைத் தொடர்பு நிலையத்தில் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 9 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2811)

**சிந்தனைக்கு**

மகத்தான சாதனைகள் சாதிக்கப்படுவது விடாமுயற்சியினாலேயே

— ஸேம்யல் ஜான்ஸன்


# ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம், 17.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## தமிழரின் வெற்றி நெருங்கி வருகின்றது

ஆனையிறவு இராணுவ முகாமை மீட்க சிறிலங்கா இராணுவட்டாரங்கள் பெரும் முயற்சிகளை எடுத்துள்ளன. கட்டைக்காட்டுப்பகுதியில் பெரும் படையிறக்கம் ஒன்றையும் செய்துள்ளன. தமிழர் தேசிய இனப் போராட்டம் வெடித்த பின்னர் சிறிலங்கா எடுத்துள்ள பெரிய தரையிறக்கம் இதுவாகும்.

ஆனையிறவு இராணுவ முகாமில் இராணுவத்தினர் பாதுகாப்பாக உள்ளனர் அம்முகாம் விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்து விடும் ஆபத்து எதுவுமில்லை என்று சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறிக்கொண்டாலும், இப்பெரிய தரையிறக்கம் ஆனையிறவு முகாம் தொடர்ந்தும் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது உள்ளது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இத்தரையிறக்கம் ஆனையிறவுப் பிரதேசத்தில் மேலும் ஒரு யுத்த முனையைத் தோற்றுவிப்பதற்காகவே என சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதிலிருந்தும் இதனைப் புரிந்து கொள்ளலாம். அதாவது விடுதலைப் புலிகளின் ஒருமுனைத் தாக்குதலுக்கு ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குப் பிடிக்க முடியாது தடுமாறுகின்றது என்பதே இதன் பொருளாகும்.

வடபகுதியில். தரையால் சூழப்பட்ட பகுதியில் இராணுவ முகாம்களைப் பராமரிக்க முடியாது என்பதை கொக்காவில், மாங்குளம், கிளிநொச்சி முகாம்களின் வீழ்ச்சிகள் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பு அளித்தகாயினும், விமானப் படையின் உதவியுடன் ஆனையிறவு முகாமைப் பரிபாலித்து விடலாம் எனச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் முடிவு செய்திருந்தன.

ஆனால் தற்போதைய போர் விமானப்படையின் உதவியுடன்கூட வடக்கில் ஒரு தரையால் சூழப்பட்ட முகாமைப் பராமரிக்க முடியாது என்பதை நிரூபித்திருக்கின்றது. முகாம்களுக்குரிய விநியோகங்கள் மட்டுமல்ல நெருக்கடி நேர்ந்தால் கிளிநொச்சி முகாமைப் பாதுகாக்க வந்த விமானப்படை இராணுவத்தை பரந்தனில் தரையிறக்கம் செய்தது போன்று மேலும் ஒரு தரையிறக்கம் செய்ய முடியாது என்பதையும் உணர்த்தியிருக்கும்.

ஆனாலது தற்பொழுது வடக்கில் சிறிலங்கா முப்படைகளும் இணைந்தே ஒரு இராணுவ நடவடிக்கையையோ அன்றி, இராணுவ முகாமையோ அன்றி, விமான, கடற்படை முகாமையோ பாதுகாக்க முடியும் என்பதை ஆனையிறவுப் போர் வெளிக்காட்டியுள்ளது.

## அவசிய பொருள்களைப் பெற ஈராக்கிற்கு ஐ. நா. சிபார்சு

(நியூயோர்க்)

உணவு மற்றும் மருந்துப் பொருள்களை ஈராக் வாங்குவதற்கு நிதி கிடைக்க அனுமதி வழங்க வேண்டுமென்று ஐ. நா. சபை அறிக்கையொன்று சிபார்சு செய்துள்ளது.

குவைத் ஆக்கிரமிக்கப்பட்ட திகதியிலிருந்து முடக்கி வைக்கப்பட்ட அரச உடைமைகளை அதற்கு கிடைக்குமாறு செய்வது அல்லது எண்ணை விற்பனை மூலமாக தேவையான நிதி வளங்களை ஈராக் திரட்ட முடியும் என அந்த அறிக்கை சிபார்சு செய்துள்ளது.

சென்ற வாரம் ஈராக் சென்றிருந்த ஐ நா சபை பிரதிநிதி குழு இந்த அறிக்கையை தயாரித்து ஐ நா. சபை பொதுச் செயலாளர் பெரஸ்டி கொயிலரிடம் ஒப்படைத்தது.

முன்னதாக ஈராக் ஐ நா சபையிடம் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை வாங்குவதற்கு எண்ணையினை விற்க அனுமதி தரவேண்டும் என கேட்டிருந்தது தெரிந்ததே.

## ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைகள் எதிர் விளைவுகளைத் தரும்

(லண்டன்)

ஈராக்கின் அணு சக்தி அமைப்புகளுக்கு எதிராக புதிய இராணுவ நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னால் பல்வித மாற்று யோசனைகளை ஆராய வேண்டுமென்று சோவியத் யூனியன் தெரிவித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் எதிர் விளைவைத்தான் ஏற்படுத்தும் என்று லண்டனில் சோவியத் அதிகாரி செய்தியாளர்களுக்குத் தெரிவித்தார்.

இதே நேரம் லண்டனில் கூடியிருக்கும் ஏழு தொழில் வள நாடுகளின் தலைவர்களையும் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் சந்தித்து ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைகள் குறித்து பேசுவார் என அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமெரிக்கா ஈராக்கை மீண்டும் மிரட்டுகிறது

(பரீஸ்)

ஈராக் அணு ஆயுதம் தயாரிக்க முயன்றால் குர்திஷ் இன மக்களை கொடுமைப் படுத்த முயன்றாலோ அதன் மீது புதிய கூட்டுப்படை தாக்குதலை தொடுக்க நேரிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் பிரான்சிய ஜனாதிபதி மித்ரோனும் எச்சரித்துள்ளனர்.

கடந்த ஞாயிறு மாலை செய்தியாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய புஷ்ஷும், மித்ரோனும் இதனைத் தெரிவித்தனர்.

இதே வேளை அணுசக்தி வசதிகள் பற்றிய புதிய பட்டியல் ஒன்றை ஈராக் ஐ நா. அணுசக்தி ஆய்வாளர் குழுவிடம் ஒப்படைத்துள்ளது.

## சோவியத்திற்கு உதவாவிடில் கடும் விளைவுகள் ஏற்படும்

(லண்டன்)

சோவியத் அரசு சந்தைப் பொருளாதாரம் நோக்கி அடி எடுத்து வைக்க உதவாவிட்டால் கடும் விளைவுகள் ஏற்படும் என்று ஏழு தொழில்வள நாடுகளுக்கு சோவியத் யூனியன் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வாடாந்தப் பொருளாதார உச்சநிலை மாநாட்டுக்காக ஏழு தொழில் வள நாட்டின் தலைவர்கள் நேற்று முன்தினம் லண்டனில் சந்தித்தனர். இந்த மாநாட்டிலிருந்து தாம் வெறும் கையுடன் திரும்பினால் அதிபர் கொர்பசேவின் நிலைமைக்கு ஆபத்து நேரும் என்று லண்டனிலுள்ள அதிபர் கொர்பசேவின் சிறப்புத் தூதுவர் லிமகோவ் கூறினார்.

சோவியத் யூனியனின் விலைவாசிகள் உயர்வைத் தடுக்கும் வகையிலும் சிறிய பாவனைப் பண்டங்களை ஐரோப்பிய நாடுகள் அனுப்ப வேண்டும் என்றும், பெரும் நிதி உதவியை கொர்பசேவ் எதிர்பார்க்கவில்லை என்றும் சிறப்புத் தூதுவர் கூறினார்.

இதேநேரம் லண்டனில் இன்று அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா, ஜேர்மனி பிரான்ஸ், இத்தாலி மற்றும் கனடாவின் தலைவர்கள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவின் பொருளாதார சீர்திருத்தத்திட்டம் குறித்து ஆய்வொன்றினை நடத்தவுள்ளனர்.

## மலிவு விலை மதுக்கடைகள் மூடப்பட்டன

(சென்னை)

மலிவு விலை மதுக்கடைகள் தமிழ் நாட்டில் நேற்று முன்தினம் முதல் மூடப்பட்டன.

தமிழ் நாட்டிலுள்ள சுமார் 3,600 மலிவுவிலை மதுக்கடைகள் முதல்வர் ஜெ' பிறந்த தினமான நேற்று முன்தினம் இரவிலிருந்து மூடப்பட்டன.

எல்லா மலிவு விலை மதுக்கடைகளும் மூடப்பட்டிருக்கின்றதா என்பதைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக இதற்கென நடமாடும் குழுக்கள் அமைத்து நடவடிக்கையில் ஈடுபடும் விற்கப்படாத மதுவகைகளை மதுக்கடை உரிமையாளர் அரசிடம் திருப்பி ஒப்படைத்துவிடலாம் மலிவு விலை மதுக்கடைகளை மூடுவதன் மூலம் அரசுக்கு ரூபா 332 கோடி நஷ்டம் ஏற்படுகிறது.

---

**ஆனையிறவு மோத...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ 2ஆம் லெப்டினன்ட் கனிஸ்ரா (சதாசிவம், செந்தமிழ்ச்செல்வி தெரு...

★ சோமதி (சுடரொளி கனகரெத்தினம் அரவி தெற்குவட்டுக்கோட்டை)

★ துஷவி (ரஞ்சிதமலர் சின்னத்தம்பி குடமியன் வறணி)

★ வனஜா (ஜானகி சமிகர் மன்னம்பிட்டி பொலநறுவை)

★ ஷோஜா [(சிறிகலா லோகநாதன் இராஜபுரம் காட்டினாறு...

என்ச அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் முடிவு செய்திருந்தன.

ஆனால் தற்போதைய போர் விமானப்படையின் உதவியுடன்கூட வடக்கில் ஒரு தரையால் சூழப்பட்ட தளமைப் பராமரிக்க முடியாது என்பதை நிரூபித்திருக்கின்றது. முகாம்களுக்குரிய விநியோகங்கள் மட்டுமல்ல நெருக்கடி நேரத்தில் கிளிநொச்சி முகாமைப் பாதுகாப்பதற்கு விமானப்படை இராணுவத்தை பரந்தனில் தரையிறக்கம் செய்தது போன்று மேலும் ஒரு தரையிறக்கம் செய்யமுடியாது என்பதையும் உணர்த்தியிருக்கும்.

அதாவது தற்பொழுது வடக்கில் சிறிலங்கா முப்படைகளும் இணைந்தே ஒரு இராணுவ நடவடிக்கையையோ அன்றி, இராணுவ முகாமையோ அன்றி, விமான, கடற்படை முகாமையோ பாதுகாக்க முடியும் என்பதை ஆனையிறவுப் போர் வெளிக்காட்டியுள்ளது.

கட்டைக்காட்டில் முப்படைகளின் கூட்டு முயற்சியுடன் தரையிறங்கிய இராணுவம் இந்நாட்களாகியும் ஆனையிறவு நோக்கி நகரவில்லை. எடுத்த ஒரு முயற்சியும் புலிகளால் முறியடிக்கப்பட்டது. பாலைவனத்தை ஒத்த ஒரு மணல் சார்ந்த பூமியில் இப் போர் நடைபெறப் போகின்றது.

இப்போர் இருபகுதியினருக்கும் இலகுவானதாக இராது போரின் வெற்றியையும் உடன் மதிப்பிட முடியாது பல்வேறு இழப்புக்களையும் தாண்டி இராணுவம் ஆனையிறவை வந்தடைந்தாலும்கூட தொடர்ந்து ஆனையிறவு முகாமை இராணுவம் பராமரிக்க முடியுமா என்பதே கேள்வி. அவ்வாறு பராமரிக்க முடியாது இராணுவம் பின்வாங்கிச் செல்லுமாயின் அதுவும் புலிகளுக்குக் கிடைத்த வெற்றிதான்.

இதுவரை வடக்கில் சிறிலங்கா இராணுவத்தின் தன்னிச்சையான செயற்பாட்டைபுலிகள் முடக்கி வைத்திருந்தார்கள். இதனால் விமானப்படையின் உதவி இராணுவத்தின் நகர்ச்சிக்குத் தேவையாக இருந்தது. ஆனால் இப்போர் விமானப்படையின் உதவியுடன்மட்டும் இராணுவம் நகர்ந்துவிட முடியாது கடற்படையின் உதவியும் அத்தியாவசியம் என்பதை உணர்த்தியுள்ளது.

இந்நிலைமை சிறிலங்காவின் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதில் புலிகள் வெகுதூரம் முன்னேறி விட்டார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகிறது. முப்படைகளில் ஒன்றின் உதவியில்லாது போனாலும்கூட சிறிலங்கா இராணுவம் நகரமுடியாத நிலைஉருவாகியுள்ளது. அதாவது இப்போரின் வழியாக தமிழரின் பலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உச்சநிலை மாநாட்டுக்காக ஏழு தொழில் வள நாட்டின் தலைவர்கள் நேற்று முன்தினம் லண்டனில் சந்தித்தனர். இந்த மாநாட்டிலிருந்துதான் வெறும் கையுடன் திரும்பினால் அதிபர் கொர்பசேவின் நிலைமைக்கு ஆபத்து நேரும் என்று லண்டனிலுள்ள அதிகாரி

[illegible]

இதேநேரம் லண்டனில் இன்று அமெரிக்கா, ஜப்பான், பிரித்தானியா, ஜேர்மனி பிரான்ஸ், இத்தாலி மற்றும் கனடாவின் தலைவர்கள் சோவியத் ஜனாதிபதி கொர்பசேவின் பொருளாதார சீர்திருத்தத்திட்டம் குறித்து ஆய்வொன்றினை நடாத்தவுள்ளவர்.

[illegible]

வது இதற்கேற்ப நடமாடும் குழுக்கள் பிரைந்து நடவடிக்கையில் ஈடுபடும் விற்கப்படாத மதுவகைகளை மதுக்கடை உரிமையாளர் அரசிடம் திருப்பி ஒப்படைத்துவிடலாம் மலிவு விலை மதுக்கடைகளை மூடுவதன் மூலம் அரசுக்கு ரூபா 332 கோடி நஷ்டம் ஏற்படுகிறது.

## ஆனையிறவு மோத...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ 2ஆம் லெப்டினன்ட் கவிஸ்ரா (சதாசிவம், செந்தமிழ்ச்செல்வி தெருவேணி, முல்லைத்தீவு)

★ சித்ரா (தவளசிங்கம் ஜெயராணி நெடுங்கேணி முல்லைத்தீவு)

★ கல்பா (சந்திரகாளி, கனகாபிள்ளை மல்லாவி சுணுக்காய்)

★ ஜனா (சுசந்தி சக்திவேல் மட்டுவில் வடக்கு சாவகச்சேரி

★ ஜீவா (சசிலகா, தனபாலசிங்கம் மட்டுவில் தெற்கு சாவகச்சேரி)

★ மங்கை (மனோன்மணி செல்லத்துரை புத்துவெட்டுவான், கிளிநொச்சி)

★ லெப்டினன்ட் சுகிதா (வசந்தி கணேசன்உடுத்துறை [illegible])

★ லெப்டினன்ட் அமுதினி (சிவமதி சிவசுப்பிரமணியம் உரும்பிராய் கிழக்கு உரும்பிராய்)

★ தமயந்தி (மகேஸ்வரி தில்லையம்பலம் சொர்ணகர் முள்ளியவளை)

★ சாரவி (திருமகள் கணேசமூர்த்தி அளவெட்டி வடக்கு அளவெட்டி)

★ குட்டியா (சாந்தநாயகி சிவலிங்கம் சிவன்கோவிலடி மட்டுவில் தெற்கு மட்டுவில்)

★ சட்டன் வானதி பரமசோதி சண்முகநாதபிள்ளை இல 174 கோவில் வீதி நல்லூர்)

★ கோமதி (சுடரொளி கனகரெத்தினம் அரவி தெற்குவட்டுக்கோட்டை)

★ துளசி (றஞ்சிதமலர் சின்னத்தம்பி குடமியன் வறணி)

★ கலைவாணி (நிர்மலா பாலசுந்தரம் கச்சாய்வீதி, சாவகச்சேரி)

★ யசோ சுசித்ரா சிவஞானம் எட்டியூர் தொண்டமனாறு

★ ராணி (கமலேஸ்வரி ஐயாச்சாமி அளம்பில் முல்லைத்தீவு)

★ பூபனி (பரமேஸ்வரி நடராஜா கோபுரம் 3ஆம் யூனிற் மல்லாவி)

★ நிரோ உதயகுமாரி கைலிட [illegible] பளைவேலன் [illegible])

★ லெப்டினன்ட் சுந்திரா (கேசி புஸ்பவதா [illegible] ராயர் இரணைப்பாலை புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு)

★ குயின்சி (சயந்தி தர்மராசா அராலி யாழ்ப்பாணம்)

★ லெப்டினன்ட் வீமா (கௌரி இராசேந்திரன் துன்னாலை வடக்கு கரவெட்டி)

★ சுகீஸ்வரலா (பரணி இரத்தினசிங்கம் மணற்குடியிருப்பு முள்ளைத்தீவு)

★ கிருஷ்ணா (வெளிமலர் பொன்னம்பலம் மாந்தை திருக்கேதீஸ்வரம் மன்னார்)

★ சுரதி (செல்வி முருகேசு நிர்மலாதேவி [illegible] காய்)

★ வனஜா (ஜானகி சங்கர் மன்னம்பிட்டி பொலநறுவை)

★ சிரோஜா (சிறிகலா லோகநாதன் இராஜபுரம் சுரடிவனாறு [illegible])

★ கண்மணி (சுறேஜினி முருகையா கிளாக்கடை மன்னார்)

★ லெப்டினன்ட் மாசிறா (சாந்தி சிற்றம்பலம் உடுத்துறை, தாளையடி)

★ மீனாட்சி (கலைச்செல்வி ராசரெத்தினம் முள்ளியவளை முல்லைத்தீவு)

★ சட்டன் தயாநிதி (சமன்லேஜினி வைத்தியநாதன் ஆற்றம்பட்டை மன்னார்)

★ லெப்டினன்ட் வினோசா (ஜெஜிதா சிவாபிள்ளை 1ஆம் குறுக்கு மாசையூர்)

★ நிசா (ஜெயகுமாரி சின்னத்தம்பி புலோலி தெற்கு புலோலி)

★ சசிகலா (சுகா சண்முகம் நிலாவெளி திருகோணமலை)

★ அமுதப்பிரியா (அகிலகுமாரி பாலசிங்கம் 4ஆம் வட்டாரம் புங்குடுதீவு)

★ தவமலர் (மஞ்சுளாதேவி ஈஸ்வரபாதம் மருதங்கேணிவடக்கு தாளையடி)

★ சுவி (ரஜி சிவரஞ்சனம் கூடுப்பிட்டி வல்வெட்டித்துறை

★ நேசஜி விஜயகுமாரி [illegible] ஒட்டாவெளி நெடுங்கேணி

★ மலர் (ரோஸ்மலர் விக்டர் யாகப்போட்சியார் புளியங்குளம் முள்ளிக்குளம்)

# ஆயுதக் கட்டுப்பாட்டிற்கு அமெரி. சக்திகள் முட்டுக்கட்டை

-சோவியத் வெளியுறவு அமைச்சர்

(மொஸ்கோ)

ஆயுதக்கட்டுப்பாட்டு உடன்பாட்டில் கையொப்பமிடுவதை அமெரிக்காவின் சில சக்திகள் தாமதப்படுத்துகின்றன என்று சோவியத் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரஸ்மித்நிக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வாஷிங்டனில் பேச்சுக்களை முடித்துக்கொண்டு மொஸ்கோ திரும்பிய பிரஸ்மித்நிக் குறிப்பிட்ட சில அமெரிக்க சக்திகள் இந்த உடன்பாட்டை முடிப்பதில் விருப்பம் காட்டவில்லை என்பதற்குத் தம்மிடம் சான்று இருப்பதாக தெரிவித்தார்.

இதே நேரம் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகர் இந்த உடன்பாடு குறித்துக் குறிப்பிடும் போது "லண்டனில் கொர்பச்சேவும், ஜோர்ஜ் புஷ்ஷும் சந்திப்பதற்கு முன் உடன்பாடு எட்டுவது என்பது தற்போது நுட்ப வல்லுநர்களிடையே நடைபெறும் பேச்சுக்களைப் பொறுத்துத்தான் அமையும்" என்று தெரிவித்தார்.

## அணுசக்தி ஒப்பந்தத்தை ஈராக் மீறியுள்ளது

(வாஷிங்டன்)

ஈராக் சர்வதேச அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட போதிலும் அதை மீறி நடந்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஈராக் அணுகுண்டு ஒன்றைத் தயாரிக்கும் நோக்குடன் சுமார் இருபதைந்து கிலோகிராம் யுரேனியத்தை மறைத்து வைத்திருப்பதாக சர்வதேச அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

அணு ஆயுத தயாரிப்புக்கு இதில் தொண்ணூறு சதவீத யுரேனியம் பயன்படுத்தப்பட இருந்ததாகவும் அவர் கூறினார்.

ஐ.நா.அ.உயர் ஸ்தானிகராலயத்திடம்

## இலங்கைக்கென பிரிட்டன் 5லட்.பவுண் உதவி வழங்கியது

(லண்டன்)

இலங்கையில் சொந்த இடங்களுக்கு திரும்பிய அகதிகளுக்கும். இடம்பெயர்ந்த மக்களுக்கும் மனிதாபிமான உதவி வழங்குவதற்காக ஐ நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்திடம் பிரிட்டன் அரசு மேலும் ஐந்து லட்சம் ஸ்டேர்லிங் பவுண்களை வழங்கியுள்ளது. இலங்கை நாணயத்தில் இது மூன்று கோடி முப்பது இலட்சம் ரூபாவுக்கு சமனாகும்.

இவ்வாண்டின் ஜனவரி மாதத்திலும், ஐ. நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயத்திற்கு அவசர உதவியாக இருபத்தையாயிரம் ஸ்டேர்லிங் பவுண்கள் வழங்கப்பட்டது 1988-ம் ஆண்டு தொடக்கம் இதுவரை பிரிட்டன் அரசாங்கம் இலங்கையின் மனிதாபிமான உதவித் திட்டங்களுக்காக மொத்தம் பதினெட்டு லட்சத்து இருபத்தையாயிரம் ஸ்டேர்லிங் பவுண்களை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### 12 புலிகள்

சன் (இம்மானுவேல் சந்திரகுமார் இருதயபுரம்), வீரவேங்கை குசேலன் (டேவிற் சுரேஷ் மாமாங்கொலனி மட்டக்களப்பு) இரண்டாம் லெப். ரகுநாத் (நிலைமம் பலம் பிரகாஷ் வல்வெட்டித்துறை) இரண்டாம் லெப். ராசேந்திரம் (முத்து யோகராசா புன்னாலைக்கட்டுவன்) வீரவேங்கை றிக்ஸ் (மகாவிஷ்ணு திமாவழகன் குச்சவெளி), இரண்டாம் லெப். வாபு (அரசரத்தினம் மனோகரன் மாதகேணி வாழைச்சேனை) லெப் ஞானி (தம்பிராசா இலநாதன் இல 25 கொத்தி ஒழுங்கை), வீரவேங்கை ஜெயசீலன் (புஸ்பராசா அரியசீலன் ராசா மொறக்கொட்டாஞ்சேனை மட்டக்களப்பு) வீரவேங்கை வென்ரன் (அருளம்பலம் தவக்குமார் மானிப்பாய்), வீரவேங்கை பிரமினான் (சதீஸ்வரன் செபமாலை சீனக்குடா திருமலை)

### 1990இல்

றம் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்று சிறிலங்கா உட்பட ஏனைய வளர்முக நாடுகளும் வெளிநாட்டுக் கடனைச் சமாளிக்க அந்நியச் செலாவணியைப் பெறும் வகையில் சுற்றுலாவை ஊக்குவிக்கின்றன இதனால் இந்நாடுகளின் பண்பாட்டுப் பாரம்பரியம் வர்த்தக மயமாக்கப்படுவதோடு பெண்ணினத்தின் கௌரவமும் சீரழிகிறது என்று அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது

கடன் கடந்த கடன் பழுவினால் வளர்முக நாடுகள் உலக சந்தையில் ஆரம்ப உற்பத்திப் பண்டங்களைக் குறைவான விலைக்கு விற்கின்றன. கடனோடு தொடர்பில்லாத வறியவர்கள் மேல் கடன் சுமை சுமத்தப்படுகிறது கடனைத் தீர்ப்பதற்கு மீளவும் கடன் பெறவேண்டி ஏற்படுவதோடு கூடுதலான வட்டி கொடுப்பனவும், வர்த்தகம் மூலம் கிடைக்கும் வருமானமும் குறைகிறது என்று மேற்படி அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

உலக வங்கி அதன் வருடாந்தக் கூட்டத்தை இம்முறை தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக்கில் வரும் ஒக்டோபர் 1991-இல் நடத்தவுள்ளது. அதற்கு முன்னோடியாகவே மூன்றாம் உலக நாடுகள் கடன் ஆலோசனை அமைப்பு பாங்கொக்கில் கூடி மேற்படி அறிவுறுத்தலை வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா, பங்களாதேஷ், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேசியா, ஹொங்கொங், தென்கொரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பாங்கொக்கில் வரும் ஒக்டோபரில் உலக வங்கியின் வருடாந்தக் கூட்டம் நடைபெறும் வேளையில் மேற்படி அமைப்பு பாங்கொக்கில் வெளிநாட்டுக் கடன் பற்றிய மக்கள் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

### மணலாற்றில் கடும்

ருத்துரி 56 II ரகத்துப்பாக்கி ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 10-40 மணியளவில் நிகழ்ந்துள்ளது. அன்றைய தினம் மணலாறு மாவட்டத்தில் அமைந்துள்ள புலிகளின் முகாம் ஒன்றைமுற்றுகையிட முயன்ற நூற்றியம்பதிற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற் கொண்டனர்

ஒன்றரை மணி நேரம் வரை தொடர்ந்து நீடித்த இம்மோதலின் பின் இராணுவத்தினரின் முயற்சி முறியடிக்கப்பட்டு இராணுவம் பின்வாங்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இதே வேளை மணலாற்றில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரமும் நேற்று ஊர்ஜிதம் செய்தது.

## ஜேம்ஸ் பேக்கரின் மத்திய கிழக்கு விஜயம்

(வாஷிங்டன்)

வளைகுடா யுத்தம் முடிவுற்ற பின்னர் தனது ஐந்தாவது சமாதான முயற்சியை மேற்கொண்டு அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் பேக்கர் மத்திய கிழக்குக்குச் செல்லவுள்ளார் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் சமாதான ஆலோசனைகளுக்கு சிரியா சாதகமான பதில் அளித்திருப்பதைத்தொடர்ந்து சமாதான முயற்சியில் முன்னேற்றம் ஏற்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்சும், ஜேம்ஸ் பேக்கரும் நம்பிக்கை கொண்டிருப்பதாக வெள்ளை மாளிகைப் பேச்சாளர் கூறியுள்ளார்.

மன்னார் மாவட்டத்திற்கு

## மூன்றிலொருபகுதி உணவே கடந்த ஆண்டு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்திற்கு கடந்த ஒரு வருட காலத்தில் தேவைப்பட்ட உணவு மற்றும் அத்தியாவசியப்பொருட்களில் மூன்றிலொரு பகுதியான பொருள்களே இம்மாவட்ட மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என்று மன்னார் செயலக உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்தார்

இம்மாவட்டத்திற்கு நிவாரண உணவு விநியோகம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்திற்குமாக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் சுமார் 190 மில்லியன் ரூபாவைக் கடந்த ஒரு வருடகாலப் பகுதியில் ஒதுக்கியது.

ஆனால் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல் நடவடிக்கைகளாலும், ஊரடங்கு அமுல் செய்யப்பட்டதாலும் இம்மாவட்டத்தில் நிவாரண நடவடிக்கைகள் மற்றும் உலர் உணவு விநியோகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது என்றும். இதனால் மேற்படி காலப்பகுதியில் சுமார் 90 மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களே இம்மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார் (ச)

### இராணுவம்

காப்பு அமைச்சினால் பெயரிடப்பட்டுள்ளது. இந்த இராணுவ நடவடிக்கையில் கடந்த மூன்று நாட்களில் பதினெட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் நாற்பத்தியாறு இராணுவத்தினர் காயமடைந்துள்ளதாகவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் இறந்த இராணுவத்தினரின் எண்ணிக்கை இதைவிட அதிகமாகும் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

இம் மூன்று நாள் மோதலிலும் சுமார் இருபது புலிகள் வீரமரணமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

### வாழ்க்கைத்திறன்

பெறவில்லை இப்பாடசாலைகள் அதற்குரிய படிவங்களை பூரணப் படுத்தி எதிர்வரும் 30 ஆம் திகதிக்குமுன் அனுப்பி வைத்தல வேண்டும். அனுப்பிக்காத பாடசாலைகளுக்குரிய நிதி வேறு பாடசாலைகளுக்கு மாற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

### மணலாற்றில்

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதலில் நேற்றுமட்டும் இராணுவத் தரப்பில் நால்வர் கொல்லப்பட்டதாகவும் 23 படையினர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### மாரீசங்கூடல்

பெயர்த்து சீனிப்பந்தலடியில் தஞ்சம் புகுந்துள்ள செல்வம் (வயது 30) ஆகிய ஐவருமே பிடித்துச் செல்லப்பட்டவர்களாவர்.

மேலும் இவர்களுடன் கைது செய்யப்பட்ட தந்தையும் மகனுமாகிய இருவரை கடற்படையினர் விடுதலை செய்துள்ளனர்.

மாரீசங்கூடலைச்சேர்ந்த பாபு என்பவரின் தந்தையான கிறிச்சந்தர் (வயது 60) தம்பி (பெயர் தெரியவரவில்லை) ஆகியோரே இவ்வாறு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப் பட்டவர்களாவர்

இதே வேளை குசுமந்துறைப் பகுதியில் கைதாகி கடற்படையினரால் இருவர் கொண்டு செல்லப்பட்டனரென்று கூறப்பட்டபோதும் அவர்களது பெயர் விபரங்கள் கிடைக்கவில்லை.

தியாகி திலீபன்

## தடகளப் போட்டிக்குரிய இலக்கங்களைப் பெறவும்

யாழ் மாவட்டத்தில் தியாகி திலீபன் நினைவாக நடாத்தப்படும் வட்டவைகள் மட்டத்திலான தடகள போட்டிகளுக்காக விண்ணப்பித்தவர்கள் பின்வரும் திகதிகளில் பின்னர் நிகழ்ச்சி நிரல்களையும், தங்களுக்கான இலக்கங்களையும் வட்டவைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாமென விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியினர் அறிவித்துள்ளனர்.

18 ஆம் திகதியில் சண்டிலிப்பாய், சோப்பாய், நல்லூரிலும். 22ஆம் திகதியில் பளை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டியிலும், 24 ஆம் திகதியில் யாழ் பருத்தித்துறை, தெல்லிப்பளை, மருதங்கேணி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலும் விநியோகிக்கப்படும்

நிர்ணயிக்கப்பட்ட திகதிகளில் இலக்கங்களைப் பெற்றுக்கொள்வதன்மூலம் இறுதி நேரச் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு போட்டியாளர்கள் கேட்கப்படுகின்றனர்.

போட்டிகள் நடைபெறும் திகதிகளும், நடைபெறும் இடங்களும் வருமாறு:

20-07-91, 21-07-91 சண்டிலிப்பாய் கோப்பாய். நல்லூரிலும், 25-07-91, 26-07-91 பளை, உடுவில், சாவகச்சேரி, கரவெட்டியிலும், 27-07-91, 28-07-91 யாழ்ப்பாணம், பருத்தித்துறை. தெல்லிப்பளை, மருதங்கேணி, சங்கானையிலும் நடைபெறும்.

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

யாழ் புகையிரத நிலையத்திற்கு முன்பாக இருக்கும் பலநோக்கு. சங்கத்திற்கு முன்னால் இருந்து பெண்களுக்கான ஒரு கைக்கடிகாரம் தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து இங்கு தங்கியுள்ள மக்களினால் கண்டெடுக்கப்பட்டு, தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது இதனை கொக்குவிலில் உள்ள தமிழர் புனர் வாழ்வுக் கழகக் காரியாலயத்தில் உரியவர் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

### சமூகம் அளிக்கவும்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் அனைத்து மாணவர்களையும் (பகல்நேர, மாலைநேர) நாளை காலை ஒன்பது முப்பது மணியளவில் கல்லூரியில் சமூகம் தருமாறு தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் அவை கேட்டுக்கொண்டுள்ளது.

### 25,000 மக்களே பதிவு

தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியே தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களில் 25,000 பேர் மட்டுமே தமது பெயர்களை பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்துள்ளனர் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

ஒரு லட்சம் இலங்கைத் தமிழர்கள் அகதி முகாம்களுக்கு வெளியே வாழ்கின்றனர் என்றும். ஆனால் இதுவரை 25,000பேர் மட்டுமே தங்களை பதிவு செய்துள்ளனர் என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது

வரும் 19ஆம் திகதிக்குள் தமது பெயரை பதிவு செய்து கொள்ளாதவர்கள் தமிழகத்தில் இருந்து அனுப்பப்படுவர் என தமிழக அரசு எச்சரித்திருந்தது தெரிந்ததே.

### புலிகள் அவசர

இடப்பட்ட தூரம் ஐந்துமைல் மட்டும் தான். இதுமிகக் குறுகிய தூரம்; எதிரியினது நகர்வைத் தடுக்க போராளிகள் ஒவ்வொரு கணமும் உயிரைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

போர்முனையில் கழியும் ஒவ்வொரு நிமிடமும் பெறுமதியானது; எனவே எமக்கு அவசரமாக மேற்குறித்த பொருள்களைச் சேமித்துத் தருமாறு சனசமூக சேவை நிலையங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

தென்மராட்சியில் சாவகச்சேரி. கொடிகாமம் பிரதேசக் காரியாலயங்களிலும், வடமராட்சியில் நெல்லியடி, பருத்தித்துறை, உடுப்பிட்டி பிரதேசக் காரியாலயங்களிலும், வலிகாமத்தில் கோப்பாய், சுன்னாகம், சங்கானை பிரதேசக் காரியாலயங்கள் மற்றும் கொண்டாவில் மாவட்டச் செயலகத்திலும் கொண்டு வந்து உடனடியாக ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் வேண்டுகின்றோம். இன்று மாலையே இக்குறிப்பிட்ட இடங்களில் பெருமளவு பொருள்களை எதிர்பார்க்கிறோம்.

இது போர்க்கால அவசர வேண்டுகோள் என்பதை மக்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இடப்பாடு ... வை ... ப் ... ணம் மகேந்திர வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.